Registered as a News Paper　　பக்கங்கள் 04　　விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM　　Peoples Daily　　மக்கள் தினசரி

நாதம்:- 03　திருவள்ளுவர் ஆண்டு 2023　　வைகாசி 10　　( 23 - 05 - 1992 )　　சனிக்கிழமை　　ஓசை: 95

## 1991 ஆம் ஆண்டில் 337781 கடவுச்சீட்டுக்கள்

1991 ஆம் ஆண்டில் இலங்கை குடிவரவு குடியகல்வுத்திணைக்களம் 3,37,781 கடவுச் சீட்டுகளை வழங்கியுள்ளதாக இந்த வாரம் வெளியிடப்பட்ட அதன் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 2,47,302 கடவுச் சீட்டுக்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கானதாகும். அதன் வரலாற்றில் இதுவே மிக அதிக எண்ணிக்கையான கடவுச் சீட்டு விநியோகம் எனவும் இதன் மூலம் 38 கோடியே 40 இலட்சம் ரூபா வருமானம் பெறப்பட்டுள்ளதாகவும் அவ்அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் வெளிநாடுகளில் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளின் கவனத்தில் இலங்கை கடவுச் சீட்டுக்கு அவ்வளவு மதிப்பு காணப்படுவதில்லை. மோசடி சக்திகள் தலைமாற்றுவதே இதற்கு காரணம். இத் தொல்லைகளைப்போக்கு (4ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகள் தடை விவகாரத்தில்

# இந்திய சிறிலங்கா அரசுகள் பிணக்கு

## தேசிய நலன்களில் முரண்பாடு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மீதான தடை விவகாரத்தில் இந்திய-சிறிலங்கா அரசுகள் மத்தியில் பகிரங்கமான முரண்பாடு எழுந்துள்ளது. இந்திய அரசு தனது தேசிய நலன்கருதி விடுதலைப் புலிகள் மீது தடையை விதித்த போதும், இந் நடவடிக்கை சிறிலங்காவின் தேசிய நலனுக்குப் பாதகமாக அமைந்திருப்பதால் இரு நாடுகளுக்கும் மத்தியில் பிணக்கு தோன்றியுள்ளது.

இந்தியா தனது குறுங்கால அரசியல் லாபம் கருதியும், உள்நாட்டில் எழுந்த அரசியல் அழுத்தங்காரணமாகவும் விடுதலைப்புலிகள் மீது தடையைவிதித்தது. இந்தத் தடையை, இலங்கை அரசு, தனக்குச் சாதகமாகப்பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் சிறிலங்கா மீது இந்தியா இராஜதந்திர அழுத்தத்தையும் போட்டது. அதாவது. இலங்கையில் புலிகள் மீது தடையை விதித்து, புலிகளைப் புறக்கணித்து விட்டு ஒரு அரசியல் தீர்வு காணவேண்டும் என இந்தியா விரும்பியது. ஆனால், இந்தியா எதிர்பார்த்தவாறு சிறிலங்கா அரசு நடந்து கொள்ளவில்லை ஏனெனில், இந்தியாவின் எதிர்பார்ப்புக்கள் தனது தேசிய நலனைப் பாதிக்கும் என சிறிலங்கா கருதுகின்றது. இங்குள்ள யாதார்த்தம் வேறு விடுதலைப் புலிகளைப் புறக்கணித்து விட்டு தமிழரின் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது என்ற புறநிலை உண்மையை சிறிலங்கா அரசு நன்கு உணர்ந்துள்ளது. எனவே, இந்தியாவின் அழுத்தத்திற்குப் பணிந்து புலிகளைத் தடை செய்வதோ, அன்றி அன்னியப்படுத்துவதோ சிறிலங்காவின் நலன்களைப் பெரிதும் பாதிக்கும் என சிறிலங்கா அரசு கருதுகின்றது. இக் கருத்து வேறுபாடு காரணமாக, இரு அரசுகள் மத்தியிலும், கருத்து முரண்பாடு தீவிரமடைந்துள்ளது.

## புலிகளைப் புறக்கணித்தால் சமாதானம் ஏற்படாது

### எதிர்க்கட்சிகளுக்கு பிரதமர் சாட்டை

(கொழும்பு)

விளையாட்டில் ஈடுபட்டிருப்ப ... பேட்டி ஒன்றின்போது இத்

தமிழ் நாட்டிலிருந்து திரும்பிய

## மன்னார் மாவட்ட அகதிகள் வசதிகள் எதுவுமின்றி அவதி

(மன்னார்)

இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய மன்னார் மாவட்ட அகதிகள் மடு அகதிமுகாமிற்கு வந்துசேர்ந்துள்ளனர். இவர்களுக்கு தங்குமிட, உணவு வசதிகள் செய்து கொடுக்கப்படாத நிலையில் அநாதரவான நிலையில் உள்ளனர்.

கடந்த 18 ஆம் திகதி மன்னார் மாவட்டம் 96 குடும்பங்களைச் சேர்ந்த 348 அங்கத்தவர்களும் 19 ஆம் திகதி வவுனியா மாவட்டம் 03 குடும்பங்களைச் சேர்ந்த 04 பேரும் மடு அகதிமுகாம் வந்து சேர்ந்தனர்.

இவர்களுக்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுக்குமாறு தொண்டர் நிறுவனங்கள் மன்னார் அரசாங்க அதிபரை கேட்டுள்ளன.

இதேவேளை கடந்த மாதம் (4 ஆம் பக்கம் பார்க்க)

விமானம் மூலம்

## திருமலை வந்த அகதிகளில 1200பேர் வவுனியா வந்தனர்

(வவுனியா)

விமான மூலம் தாயகம் திரும்பிய அகதிகளில் சுமார் 320 குடும்பங்களைச் சேர்ந்த 1200 பேர் கடந்த ஞாயிறு இரவு திருமலையிலிருந்து வவுனியா வந்தனர்.

இவர்களில் 17 குடும்பங்கள் வவுனியாவையும் 83 குடும்பங்கள் மன்னாரையும் 26 குடும்பங்கள் கிளிநொச்சியையும் 27 குடும்பங்கள் முல்லைத்தீவையும் 8 குடும்பங்கள் யாழ்ப்பாணத்தையும் சேர்ந்தவையாகும்.

வவுனியா ரெயில் நிலையத் திற்கண்மையில் உள்ள தற்காலிக முகாம்களில்தற்போது தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் நாட்டிலிருந்து

## தொப்பிகல ராணுவமுகாம் மூடப்பட்டது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தொப்பிகல இராணுவ முகாம் நேற்று முன் தினம் முதல் மூடப்பட்டுள்ளது. அங்கிருந்து ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் மட்டக்களப்பு வெபர் அரங்கு முகாமிற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக மட்டக்களப்பில் பெய்துவரும் பெருமழை காரணமாக அப்பகுதியில் நுளம்புத் தொல்லை அதிகரிப்பினால் ஏற்பட்ட மலேரியா நோய் பரவுவதனாலேயே மேற்படி முகாம் தற்காலிகமாக இடமாற்றப்பட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன

## மண்டைதீவிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம்

(குருநகர்)

மண்டைதீவுச்சந்திசிறிலங்கா இராணுவ காவலரணில் இருந்துநேற்று(22-5-92)மாலை 4 மணியளவில் துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ளப்பட்டது.

யாழ். றேகடிப் பகுதியில் வள்ளத்தில் சென்றவர்களை நோக்கி காவலரணில் நின்ற இராணுவத்தினர் சுட்டதாக தெரிவிக்கப்பட்டது, தொடர்ந்தும் துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்று வருகிறது

## இராணுவ உளவாளிகள் வவுனியாவில் கெடுபிடி

[வவுனியா]

வவுனியா நகரில் சிறிலங்கா இராணுவ உளவாளிகளின் செயல்பாடுகள் அதிகரித்துள்ளன. சந்தேகத்திற்கிடமாக உலாவும் மக்கள் திடீர் என்று கைது செய்யப்படுகின்றனர்.

வடபகுதியிலிருந்து வவுனியா ... ணுவ உளவாளிகளின் கவனிப்பிற்கு உள்ளாகின்றனர்.

வவுனியா பேயாடி கூழாங்குளம் சோதனை முகாமில் இராணுவ உளவாளிகளினால் பல பொதுமக்கள் தினமும் விசாரணைக்குட்படுத்தப்படுகின்றனர்.

கள் மன்னாரையும் 26 குடும்

## தமிழ் நாட்டிலிருந்து

# ஐம்பது குடும்பங்கள் யாழ். வந்து சேர்ந்தன

(யாழ்ப்பாணம்)

தமிழகத்தில் இருந்து தாயகம் திரும்பிய சுமார் ஐம்பது குடும்பத்தினர் யாழ். மாவட்டத்திற்குள் வந்து சேர்ந்துள்ளனர்.

இவர்கள் 1990 ஆண்டு இறுதியில் இங்கிருந்து அகதியாக தமிழ் நாட்டுக்குச் சென்றிருந்தனர். கடந்தமாதம் திருமலை திரும்பிய இவர்கள் திருமலையிலும் வவுனியா அரச அகதி முகாமிலும் தங்கி விட்டு தற்பொழுதுதமது சொந்த இடங்களுக்குத் திரும்பியிருக்கின்றனர்.

அதே வேளை கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 14 குடும்பங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 18 குடும்பங்களும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிவிட்டதாக அங்கிருந்து எமக்குக் கிடைத்த தகவல்கள் கூறுகின்றன. (ச)

# வட-கிழக்கில் கூட்டுறவுதுறை சிறப்பாக செயற்படுகிறது

## - மல்லிமாராச்சி

(தெரதெனிய)

யுத்தத்தால் பாதிப்படைந்த போதிலும் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கூட்டுறவுத்துறை திறமையாகச் செயற்படுகின்றது என உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி தெரிவித்தார்.

தெரதெனிய மத்திய மகா வித்தியாலயத்தில் கூட்டுறவுத்துறை ஊழியர்கள் மத்தியில் அண்மையில் உரையாற்றிய அமைச்சர் மல்லிமாராச்சி இவ்வாறு தெரிவித்தார்.

40 ஆயிரம் கூட்டுறவு ஊழியர்களுக்கு விபத்து, சுகவீனம் போன்றவற்றிற்காக காப்புறுதித் திட்ட நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

## எதிர்க்கட்சிகளுக்கு பிரதமர் சாடல்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் தடை விவகாரம் குறித்து சிறிலங்கா எதிர்க்கட்சிகளின் நிலைப்பாட்டைப் பிரதமர் டி.பி. விஜயதுங்கா வெகுவாகச் சாடியுள்ளார். விடுதலைப் புலிகளை புறம் தள்ளிவிட்டு இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காணமுடியாது எனவும், மக்களிடம் விடுதலைப்புலிகளுக்குப் பெரும் ஆதரவு உள்ளது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ள டி.பி. விஜயதுங்கா எதிர்க்கட்சிகள் சங்கீதக்கதிரை விளையாட்டில் ஈடுபட்டிருப்பதாகவும் குற்றஞ்சாட்டிய அதேவேளை சில விடயங்களில் இந்தியாவையும் மறைமுகமாகச் சாடினார்.

புலிகளின் தடை விவகாரம் தொடர்பாகநேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் அறிக்கை வெளியிட்டுப் பேசிய பிரதம மந்திரி டி.பி. விஜயதுங்கா இந்திய அரசாங்கம் விடுதலைப் புலிகள் மீது தடை உத்தரவு பிறப்பித்துள்ளமை எமக்குத் தெரியும். இலங்கையிலுள்ள இந்தியத்தூதுவர் அண்மையில் பேட்டி ஒன்றின்போது இத்தடையானது அடையாளபூர்வமானநடவடிக்கைஎன்று குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும் வடக்கு-கிழக்கில் தொடர்ந்து நடைபெற்று வரும் போரையும், எதிர்க்கட்சிகளின் நடவடிக்கைகள் பற்றியும் குறிப்பிட்டார். தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா, அனுரா பண்டாரநாயக்கா அவர்களின் கடந்தகால அரசியல் நிலைப்பாடு

[4 ஆம் பக்கம் பார்க்க]

# சிறிலங்கா பிரதமர் கூற்றுக்கு இந்திய தூதுவர் ஆட்சேபம்

(கொழும்பு)

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பேசிய சிறிலங்கா பிரதமர் டி.பி. விஜயதுங்கா 'சண்டேரைம்ஸ்'பத்திரிகையை மேற்கோள் காட்டி விடுதலைப் புலிகள் மீது இந்தியா விதித்த தடை ஒரு அடையாள நடவடிக்கையே என்று குறிப்பிட்டதற்கு கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் தனது பலத்த ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளது.

இந்தத் 'தடை' ஒரு அடையாள நடவடிக்கையே என்று சிறிலங்கா பிரதமர் கூறியிருப்பது குறித்து கொழும்பிலுள்ள இந்திய ஸ்தானிகராலயம் வியப்புத் தெரிவித்திருக்கின்றது.

தமது கருத்துக் தப்பர்த்தம் செய்து கொள்ளப்பட்டது என்றும், சிறிலங்காப் பிரதமரின் கூற்று இந்தியாவின் நோக்கம் பற்றிய தவறான கருத்தை வைத்திருக்கக்கூடும் என்பதையும் இந்திய உயர் ஸ்தானிகர் ஜா தெரியப்படுத்தியிருக்கிறார்.

இந்தியா புலிகள்மீது விதித்திருக்கும் தடைக்கு அனைத்துலக நாடுகளின் ஆதரவும் இருக்கும், தமிழ் நாட்டிலிருந்து அவர்கள் செயற்படுவதைத் தடுக்கும் என்றுதான் வழங்கிய செவ்வியில் கூறியதாக ஜா சிறிலங்கா அரசுக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலாவும் மக்கள் திடீர் என்று கைது செய்யப்படுகின்றனர்.

வடபகுதியிலிருந்து வவுனியா நகரம் ஊடாகத் தென்பகுதி செல்பவர்களும், வவுனியா நகரில் வேலை செய்பவர்களும், நகரப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களும் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்படுகின்றனர். பல பொதுமக்கள் தினமும் விசாரணைக்குட்படுத்தப்படுகின்றனர்.

சாதாரண உடையில் நடமாடும் இந்த உளவுப் பிரிவினர், சந்தேகத்துக்குரியவர் பலரைத் தடுத்து வைத்து

(4ஆம் பக்கம் பார்க்க)

# வற்றாப்பளைஎறிகணைவீச்சு விசாரிக்க குழு நியமனம்

(கொழும்பு)

வற்றாப்பளை அம்மன் கோவில் பொங்கலில் கலந்து கொண்ட பக்தர்கள் மீது சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலினால் 23 தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள் என்ற குற்றச் சாட்டை விசாரிக்கச் சிறப்பு விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது.

முல்லைத்தீவு வற்றாப்பளை அம்மன் கோவில் சம்பவம் பற்றி விசாரிக்க மூன்று பேர் கொண்ட சிறப்பு விசாரணைக் குழு ஒன்றை நியமிக்கப் போவதாகக் கொழும்பில்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# றெட்பானா அதிகாரிகள் யாழ். வந்துள்ளனர்

(யாழ்ப்பாணம்)

றெட்பானா நிறுவன தலைமை அலுவலக அதிகாரிகள் குழுவினர் யாழ். மாவட்டத்தில மேற்கொள்ளப்பட வேண்டிய அவசர நிவாரண நடவடிக்கைகள் குறித்து நேரடியாக அவதானித்து அறிந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் வந்திருக்கின்றனர்.

மேற்படி நிறுவனத்தின் அவசர நிவாரணத் திட்ட இணைப்பாளர் திரு. பீற்றஸன், நிவாரணப் பணிப்பாளர் திரு. யாகூப் ஆகியோரும் மற்றும் திரு. றோவவ்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# பாராளுமன்றத் தெரிவுக்குழுவை சுதந்திரக்கட்சி பகிஷ்கரிக்கும்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி இனப்பிரச்சினைத்தீர்வுக்கான யோசனைகளை முன்மொழியவென அமைக்கப்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவைஎதிர்காலத்தில் பகிஷ்கரிப்பு செய்ய போவதாக அறிவித்துள்ளது.

கட்சியின் தேசிய அமைப்பாளரான அநுரா பண்டாரநாயக்கா கொழும்பில் நேற்று முன்தினம் விடுத்த அறிக்கையில் இதனைத்தெரிவித்தார்.

இதேவேளை, கடந்த செவ்வாயன்று மாலை நான்கு மணிக்கு தெரிவுக்குழு கூடுவதற்கு திட்டமிட்டிருந்தபோதிலும் தெரிவுக்குழுவில் அங்கத்துவம் வகிக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூட்டத்திற்கு சமுகமளிக்காமையால் கூட்டம் திட்டமிட்டவாறு நடைபெறவில்லை.

எனினும் இது தெரிவுக்குழுவைப்பகிஷ்கரிப்பதாகாது என எதிர்க்கட்சிகள் முதலில் தெரிவித்தன.

தெரிவுக்குழுவின் கூட்டம் நடைபெறாவிட்டாலும் அதில் அங்கத்துவம் வகிக்கும் சகல கட்சிகளையும் சேர்ந்த உறுப்பினர்கள் தனிப்பட்ட முறை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கும்பிறு பிட்டியில் விமானக் குண்டு வீச்சு

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டம் கும்பிறுப்பிட்டி காட்டுப் பகுதியில் நேற்றுக் காலை 8-15 மணியளவில் 2 குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதல்களை நடாத்தின. அத்துடன் ஓர் உலங்கு வானூர்தி 50 கலிபர் துப்பாக்கிபிரயோகத்தை மேற்கொண்டது

# வீதி விபத்துகளைத் தவிர்க்க மக்கள் ஒத்துழைக்க வேண்டும்

## -காவல் துறையினர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த சிலநாட்களாக யாழ் குடாநாட்டில் சாவகச்சேரி, சுன்னாகம், யாழ்.நகர் ஆகிய பகுதிகளில் வாகன விபத்துக்கள் அதிகரித்துள்ளன இதனால் அநியாய மானஉயிரிழப்புகளும், பொருள் இழப்புக்களும் ஏற்பட்டுள்ளன என்று தமிழீழக் காவல்துறைத் தலைமைச் செயலகம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கை ஒன்று கூறுகிறது.

பின்வரும்காரணங்கள் விபத்துக்களுக்கான காரணம் என்று அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கின்றது.

பக்கம்பக்கமாகத் துவிச்சக்கர வண்டிகளைச் செலுத்திக் கொண்டு போவது. இவ்வாறு போகும்போது வண்டியின் ஓட்டுநர்கள் தமக்குள் பல வேறுபட்ட கதைகளைக்கதைத்த வண்ணம் செல்கின்றனர். இவர்களது முழுக்கவனமும் தமது பயணத்தை மறந்து

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

21.05.92 கொம்படி பாதையால் பயணம் செய்யும் போது சி.நடராசா, தும்பளை கலட்டி பருத்தித்துறை என்பவரது தேசிய அடையாள அட்டையும் ரூபா 8500/= அடங்கிய மணிபர்சும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் அல்லது போக்குவரத்து சேவை அலுவலகம் முரசுமோட்டையில் ஒப்படைக்கவும். (2535)

### விசேட பொதுக்கூட்டம்

(மண்டைதீவு)

ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்க விசேட பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு சங்க தற்காலிக பணிமனையில் சங்கத் தலைவர் திரு தி. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. இதை சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்தார் (88)

### நூல்கள் அன்பளிப்பு

நோயாளர் நலன்புரிச் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட இருக்கும் நோயாளர்களுக்கான நூலக சேவைக்கென தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தினர் ரூபா மூவாயிரம் பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளனர். இவற்றில் கதைகள், சிறுகதைகள், கவிதைகள், சிறுவர்களுக்கான நூல்கள் ஆகியவை அடங்குகின்றன.

### சிறிலங்கா பாராளுமன்றில் பெரும் அமளி துமளி

# அரசும் - எதிர்க்கட்சிகளும் ஒத்துழைக்க மறுப்பு ஒழுங்கை நிலைநாட்ட சபாநாயகர் சிரமம்

(கொழும்பு)

பாராளுமன்றம் கடந்த புதன் காலை கூடிய போது எதிர்க்கட்சியினரின் கேள்விகளுக்கு பதிலளிக்க அரச தரப்பினர் மறுத்ததை அடுத்து சபையில் வாதப் பிரதிவாதங்களும் அமளிதுமளியும் ஏற்பட்டது இதனையடுத்து சபாநாயகர் எம்.எச். முஹம்மது ஒழுங்கை நிலைநாட்ட பெரிதும் சிரமப் பட்டார்.

பாராளுமன்றில் சபாநாயகர் முகஹம்மது தலைமையில் கூடிய போது சுதந்திரக்கட்சி எம்.பி. நிமல் சிறிபால டிசில்வா முதல் கேள்வியை எழுப்பிய போது அதற்கு பதில் சபை முதல்வரான விஜேபால மெண்டிஸ் எழுந்து எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு அரசாங்கம் பதிலளிக்கப் போவதில்லை என அறிவித்தார்.

மேலும் எதிர்க்கட்சியினர் அரசுடன் ஒத்துழைக்க மறுப்பதால் நாமும் அவர்களுடைய கேள்விகளுக்கு பதிலளிக்க மறுப்பு தெரிவிக்கிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதனிடையே டி. சில்வா குறுக்கிட்டு எனது கேள்வி முக்கியமானது. அதற்கு பதிலளிக்க முடியாத நிலையிலேயே அரசு பின்வாங்குகிறது என்றார் அப்போது மீண்டும் கூச்சலும் குழப்பமும் எழுந்தது.

தொடர்ந்து சபாநாயகர் எதிர்க்கட்சியினர் கேள்விகளைக் கேட்க நான் இடமளிக்கிறேன் ஆனால் பதிலளிக்குமாறு யாரையும் வற்புறுத்த முடியாது எனத் தெரிவித்து கேள்விகளுக்கு இடமளித்தார் ஒவ்வொரு எதிர்க்கட்சியும் தத்தமது பெயர்களில் கேள்வியை எழுப்பினர் ஆனால் அமைச்சர்கள் எவரும் பதிலளிக்கவில்லை.

அமைச்சர்கள் மௌனமாக இருந்ததைத் தொடர்ந்து சபாநாயகர் நீங்கள் கேள்விகளுக்கு பதிலளிக்காவிட்டாலும் கேள்வி எழுப்பப்பட்டதும் எழுந்து பதிலளிக்கவில்லை என்பதையாவது கூறக்கூடாதா என்று சபாநாயகர் கேட்டார்.

எனினும் முதல் கேள்வியை நிமல் சிறிபால, டி சில்வா கேட்கத் தொடங்கியதுமே பிரதமர் உட்பட பல அமைச்சர்களும் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.

### கொழும்பில் விசேட கூட்டம்

[யாழ்ப்பாணம்]

இலங்கை வங்கியின் மாவட்ட முகாமையாளர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று நாளை மறுதினம் கொழும்பில் நடைபெற உள்ளது

அனைத்து மாவட்ட முகாமையாளர்களும் கலந்து கொள்ள இருக்கும் இக்கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக யாழ். மாவட்ட முகாமையாளரும் கொழும்பு சென்றுள்ளார். இம்மாவட்டத்தில் நிலவும் பணநெருக்கடி மற்றும் கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் ஆகிய விடயங்கள் குறித்து இவர் எடுத்துரைப்பார் எனத் தெரியவருகிறது. [ ]

## பட்டதாரிகளுக்கு தொழில்; திட்டஅமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

பட்டதாரிகளுக்குத்தொழில் வாய்ப்பு வழங்கத்திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முதலில் பட்டதாரிகளுக்கு ஆசிரியர்களாகவும், அரச திணைக்களங்களிலும் மொழிபெயர்ப்பாளர்களாகவும் நிரந்தரமான நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

மனிதவலு அமைப்பு நிறுவனங்கள் மூன்று வருட காலத்திற்கு 6,000 பட்டதாரிகளுக்கு தொழிற் பயிற்சி வழங்கவுள்ளன. பயிற்சிக்காலத்தில் 2500 ரூபா படி கொடுக்கப்படும். படியில் 10 விகிதத்தை அரசாங்கம் கொடுத்துதவும்.

விண்ணப்பதாரர்களான 6,000 பட்டதாரிகளில் 2020 பட்டதாரிகள் பற்றிய விபரங்கள் பதினொரு மனிதவலு அமைப்பு நிறுவனங்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்றும், நான்கு மாதங்களுக்கிடையில் இவர்களுக்கான தொழிற் பயிற்சி வழங்கப்படவுள்ளன என்று திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் குறிப்பொன்று தெரிவிக்கின்றது. மற்றொரு தொகுதியான 400 பட்டதாரிகள் பெரும்பாலாக கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவின் அனுசரணையுடன் பயிற்சி பெறுபவர்கள். மிகுதி 3580 பட்டதாரிகளுக்கு பயிற்சி வழங்குவதற்கான முன்னேற்பாடுகளை மனிதவலு அமைப்புகள் மேற்கொள்ளவுள்ளன.

## இடமாற்றம் தொடர்பாக மா.சபை கால அட்டவணை

அரச ஊழியர்களின் இடமாற்றம் தொடர்பாக பொது நிர்வாக மாகாண சபைகள் அமைச்சு கால அட்டவணை ஒன்றை வெளியிட்டுள்ளது. நடப்பு வருடம் முதல் அரச ஊழியர்களின் இடமாற்றம் இந்தப் புதிய கால அட்டவணைப்படி பின்பற்றியே நடைபெறவுள்ளது.

இதன் பிரகாரம் இடமாற்றச் சபைகள், இடமாற்றக் கொள்கை வகுத்தல், இடமாற்றத்துக்கான விண்ணப்பங்கள் கோருதல் ஆகியன மே 5க்கும் 30க்கும் இடைப்பட்ட காலத்தில் பூர்த்தி செய்யப்படவேண்டும்.

இடமாற்ற விண்ணப்பங்கள் அனுப்புவதற்கான கடைசித் திகதி ஜூலை 15. திணைக்களங்கள் இடமாற்றப்பெயர்ப் பட்டியலை சம்பந்தப்பட்ட இடமாற்றச் சபையிடம் ஜூலை 30க்கு முன்சமர்ப்பிக்கவேண்டும்.

இடமாற்றம் கோரியவர்களுக்கு இடமாற்ற உத்தரவுகள் ஆகஸ்ட் 10க்கும் 31க்குமிடையில் கிடைக்கும் படி அனுப்பவேண்டும். இடமாற்றம் தொடர்பான முறையீடுகள் செப்டம்பர் 10க்கும் 30க்கும் இடையில் ஏற்றுக்கொள்ளப்படும். ஒக்டோபர் 10க்கும் 30க்கும் இடையில் முறையீடுகள் ஆராயப்பட்டு, குறிப்பிட்ட இதே காலப்பகுதியிடையில் முடிவுகள் அறிவிக்கப்படும்.

இடமாற்றச் சபைகள் பின்வருமாறு அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது. திணைக்களத்துக்குள் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குமாற்றுவதற்கு திணைக்கள இடமாற்றச் சபையும், ஒரே அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களுக்கிடையிலான மாற்றங்களுக்கு அமைச்சு மட்டத்திலான மாற்றச் சபையும், அமைச்சுகளுக்கிடையிலான மாற்றங்களைக் கவனிப்பதற்கு அமைச்சுகளுக்கிடையே அமையும் ஒரு இடமாற்றச் சபையும் செயற்படும்.

இடமாற்றத்துக்கான தகைமைகளும் கால அட்டவணையோடு அமைந்த சுற்று நிருபத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது.

**இலங்கை மத்திய வங்கி**

## அறிவித்தல்

### ஹோம் பினான்ஸ் லிமிட்டட்

(இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையின் அதிகாரத்துக்குட்பட்டது)

இலங்கை மத்திய வங்கியானது 1992 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக ஹோம் பினான்ஸ் லிமிட்டட் இன் வைப்பாளர் தொடர்பான நிவாரணக் கொடுப்பனவு வேலைகளை முடிவுக்குக் கொண்டு வரலாம் என எதிர்பார்க்கின்றது. சில வைப்பாளர்கள் தம்மால் அனுப்பப்பட்ட நிவாரணக் கொடுப்பனவு விண்ணப்பங்கள் தொடர்பாகக் கம்பனிக்கு அவர்களால் கொடுக்கப்பட்ட விலாசங்களின்படி அனுப்பப்பட்ட கடிதங்களுக்குப் பதில் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை அவதானித்துள்ளோம். இன்னமும் முதலாவது பகுதிக் கொடுப்பனவு பெறாத எல்லா வைப்பாளர்களும் உடனடியாகக் கம்பனியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். கம்பனியின் விலாசம் கீழ்வருமாறு:

**HOME FINANCE Ltd,**
**463, GALLE ROAD,**
**COLOMBO - 3**

இயக்குனர்,
வங்கி அல்லாத நிதி நிறுவனங்களின்
மேற்பார்வையாளர்.

(சி/4452)

## பத்திரிகை ஆசிரியர்மீது குற்றப்பத்திரிகை தாக்கல்

பொலிஸ்மா அதிபர் திரு. ஏர்னஸ்ட் பெரேராவின்கௌரவத்திற்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையில் முன்னாள்பொலிஸ் மா அதிபர் திரு பி. உடுகம்பொலையினுடைய தெனக் கூறப்படும் சத்தியக் கடதாசி ஒன்றை 1992ஆம் ஆண்டு ஏப்ரல் 12ஆம் திகதி அன்று ''யுக்திய'' பத்திரிகை செய்தியாக வெளியிட்டிருந்தது

இது தொடர்பாக மேற்படி பத்திரிகையின் ஆசிரியரான வடுகே மெத்த சேன சுனந்தா தேசப்பிரிய மீது சட்டமா அதிபர் கடந்த திங்களன்று (பீனல் கோட் சட்டம் 480 பிரிவின் கீழ்) கொழும்பு உயர் நீதி மன்றில் குற்றப் பத்திரத்தை தாக்கல் செய்துள்ளார்.

பொலிஸ் மா அதிபருக்கு லஞ்சம் கொடுப்பதற்காக ஜனாப் எம். ஏ. ஹனிபா என்பவர் கொழும்பிலுள்ள வங்கி ஒன்றிலிருந்து ஐந்து லட்சம் ரூபாவை பெற்றாரெனச் சொல்லப் படுகிறது ஜனாப் ஹனிபா சிரேஷ்ட அதிகாரியாக கடமையாற்றும்

## தங்க நகைகள் கொள்ளை இராணுவ சிப்பாய் கைது

(கொழும்பு)

கண்டி கட்டுகஸ்தோட்டை வரல்லகமவில் ஆயுத முனையில் தங்க நகைகள் கொள்ளையடிக்கப்பட்டமை தொடர்பாக இராணுவ வீரர் ஒருவர் கட்டுகஸ்தோட்டை பொலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பி.சில்வா என்பவர் தாக்கல் செய்த புகாரை அடுத்தே முன் அறிவித்தல் எதுவுமின்றி கடமைக்கு செல்லாதிருக்கும் இராணுவ வீரர் எஸ் டபிள்யு சில்வா என்பவர் கைதாகியுள்ளார்

சுமார் முப்பத்தியோராயிரம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டதாக புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பொது அறிவுப் போட்டி

யாழ் ரொட்டரிக் கழகம் நடாத்தும் பொது அறிவுப் போட்டி எதிர்வரும் திங்கட்கிழமை (25.5.92) உடுவில் மகளிர் கல்லூரியில் இடம் பெறுமென தெரிவிக்கப்படுகிறது. (05)

## நினைவு கூருகின்றோம்---
## 1992-05-23

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

நடேஸ் (வைத்திலிங்கம் கேதீஸ்வரன் - புங்குடுதீவு)

1987 ...

### வெளிவாரிப் பட்டப்படிப்பு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

கிழக்கிலங்கை செங்கலடி

### சிறிலங்கா பாராளுமன்றத்தில்

## விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

கிழக்கிலங்கை செங்கலடி பல்கலைக் கழகத்திற்கு வெளிவாரி பட்டப்படிப்பிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1991 - 92 கல்வியாண்டிற்கே முதன்முதலில் விவசாயம், விஞ்ஞானம் (பௌதிகம், உயிரியல்) வணிகம், வியாபார நிர்வாகம் ஆகிய துறைகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக் கற்கை நெறிகளுக்கு ஆகக்குறைந்தகல்வித்தகைமையாக க. பொ. த. உயர்தரத்தில் நான்கு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மேலும் இந்நெறிகள் 4 வருடங்களை கொண்டதாக இருக்கும்.

இதற்கான முடிவுத் திகதி அடுத்தமாதம் பதினைந்தாம் திகதியாகும். (05)

## பரிசளிப்பு விழா

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தினால் கடந்தபெப்ரவரிமாதத்தில் நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டியில்வெற்றிபெற்றவர்களுக்கான பரிசளிப்புவிழா எதிர்வரும் 30 - ம் திகதிசனிக்கிழமை காலை 9.00மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் சம்மேளனத் தலைவர்திரு.சி.தவகோபால்தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. சுந்தரம் டிவகலாலாவும், சிறப்பு விருந்தினராக யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வே.பொ. பாலசிங்கமும் பங்குபற்றவுள்ளனர்.

மடம்வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் 'உணர்ச்சிகள் உறங்குவதில்லை' என்ற நாடகமும் இடம்பெறும். (24

---

...னச் சொல்லப்படுகிறது ஜனாப் ஹனிபா சிரேஷ்ட அதிகாரியாக கடமையாற்றும் நூர்தீன் ஹாஜியார் அண்ட் கம்பெனியில் வெடி மருந்துகள் கண்டுபிடிக்கப் பட்டது. சம்பந்தப்பட்ட விசாரணைகளில் பொலிஸ்மா அதிபர் தனிப்பட்ட முறையில் தலையிட்டார் என்று திரு. உடுகம்பொல தெரிவித்திருந்தார்என்பது குறிப்பிடத்தக்கது.

## உடுகம்பொல மீது குற்றப்பத்திரிகை தாக்கல்

இலங்கைமக்களிடையே அதிருப்தியையும் விரோதத்தையும் ஏற்படுத்த முயன்றதாகவும் அரசாங்கத்துக்கு எதிராக அதிருப்தி உணர்வைத் தூண்டியதாகவும் (பீனல்கோட் சட்டம் 120வது பிரிவின்கீழ்) முன்னாள் பொலிஸ்மா அதிபர் உடுகம்பொல மீது குற்றஞ்சாட்டிசட்டமாஅதிபர் கடந்த திங்களன்று கொழும்பு உயர் நீதிமன்றில் மேலும் ஒரு குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்துள்ளார்.

குற்றப்பத்திரத்தில் நான்கு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. சமாதான நீதிவான் W.C.பொத்தேஜு முன்னிலையில் 18.3 92 அன்று உடுகம்பொல செய்து கொண்ட சத்தியக் கடதாசியின் அடிப்படையிலேயே இக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

## கொள்ளையில் ஈடுபட்ட ரெலோ உறுப்பினர் கைது

பல்வேறு கொள்ளைகளுக்கு உபயோகிக்கப்பட்டதாககூறப்படும் ஆயுதங்கள் கைக்குண்டுகளுடன் ரெலோ இயக்கத்தைச்சேர்ந்தவர்களென கூறப்படும் இருவரையும் முஸ்லிம் இளைஞர்ஒருவரையும் பேலியகொடை பொலிசார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இவர்கள் களனி, வெள்ளவத்தை ஆகிய பகுதிகளில் கொள்ளைகளில் ஈடுபட்டனர் எனவும் இப்போது இவர்கள் விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அஞ்சல் அலுவலகங்களில் 60 வெற்றிடங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் அஞ்சல் அலுவலகங்களில் அறுபது வெற்றிடங்கள் இருப்பதாகவும், அந்த இடங்களுக்கு ஓய்வுபெற்ற தபாலதிபர்களின் சேவை பெறப்படுவதாகவும் வடக்குமாகாண பிரதித்தபால்மா அதிபரான சேதுகாவலர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இவ்வகையில் ஆறு பேர் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

---

சிறிலங்கா பாராளுமன்றத்தில்

## கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியில் 19 பிரேரணைகள் நிறைவேறின

பாராளுமன்றம், கடந்த புதன்கிழமை நண்பகல் இடைவேளைக்குப் பின்னர் கூடிய போது நிதி ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான அரசின் 21 பிரேரணைகளில் 19 பிரேரணைகள் எதிர்க்கட்சிகளின் கூச்சல் குழப்பங்களுக்கு மத்தியில் நிறைவேறியது

பெயர் கூறி வாக்கெடுக்குமாறு எதிர்க்கட்சியினர்விடுத்த கோரிக்கைக்கிணங்க பிரேரணைகள் ஒவ்வொன்றாக வாசிக்கப்பட்டு ஒரு சில நிமிட நேரங்களில் எதிர்க்கட்சியினரின் கூச்சல் குழப்பங்கள் மத்தியில்சகலபிரேரணைகளும் நிறைவேற்றப்பட்டது.

## உற்பத்திப் பொருள்களைக் கொண்டு செல்வோர் அவதி

உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்வதற்காக வவுனியா நகரப்பகுதிக்குகொண்டு செல்வோர்பெரும் கஷ்டத்தை அனுபவித்து வருகின்றனர்.

மரக்கறி வகைகள் செத்தல் மிளகாய் போன்ற பொருள்களை மூடை கட்டிக் கொண்டு செல்வோர், குறிப்பிட்டபகுதி தூரம் வரை தலையில் சுமந்து வரவேண்டும் என்று இராணுவம் அறிவித்ததை அடுத்தே விவசாயிகள் கஷ்டத்தை அனுபவிக்கின்றனர்.

இந்தப் பொருள்களை ஏற்றிச் செல்ல வேண்டிய வாகனம் வரும் வரையில் நிலத்தில் இறக்கி வைப்பதற்கு இராணுவம் தடை விதித்துள்ளது. இதனால் நீண்ட நேரம்தலையில் சுமந்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

குறிப்பிடப்படும் வாகனத்தில் இடம் பிடித்துக் கொள்வதற்கு தாமதிப்போர் திரும்பிச் செல்ல நேரிடுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (தி)

...பட்டுள்ளது.


### ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கு
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4.00, 6.00 மணி
காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றது.

# Freedom Forces

(இந்தோனேசிய விடுதலைப் படை)

(சி/4449)


1987 ஆம் ஆண்டு மட்டக்களப்பு புல்லுமலைப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

★ வீரா/சீலன் (சிவக்கொழுந்து சிவலிங்கம் - மட்டக்களப்பு)

★ கிருபை (இளையதம்பி கிருபைரத்தினம் - ஆயித்தியமலை, மட்டக்களப்பு)

★ சந்திரன்/சாந்தன் (சதாசிவம் சந்திரமோகன் - நாவற்காடு, மட்டக்களப்பு)

1988 ஆம் ஆண்டு மணலாறு, நித்திகைக்குளம் பகுதியில், இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய

2 ஆம் லெப். ஜீவன் (சுந்தரலிங்கம் ரகுநாதன் - தென்னமரவடி, திருக்கோணமலை)

1989 ஆம் ஆண்டு திருக்கோணமலை/மூதூர் 64-ம், கட்டைப் பகுதியில், தேசவிரோத சக்திகளினால் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட -

★ அமிர்தம் (நடராசா அமிர்தலிங்கம் - மல்லிகைத்தீவு மூதூர், திருக்கோணமலை)

★ ஹசாலி (சேகுமுகமட் சகாப்தீன் - ஆலிம்சேனை, மூதூர், திருக்கோணமலை)

கிளிநொச்சியில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட கனகபுரத்தைச் சேர்ந்த பிரஜைகள் குழுப்பிரமுகர்.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்தி -

நீசன் (மயில்வாகனம் ராஜா - பெரியதம்பிரான் வீதி, அக்கரைப்பற்று, அம்பாறை)

மன்சூர் (காத்தமுத்து ஜெகதீசன் - கண்ணகிபுரம், வாழைச்சேனை, மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட களுவங்கேணி - 02 ஐச் சேர்ந்த கூலித் தொழிலாளியான தமிழ் இளைஞன்

### ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

### தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/4447)

## சிந்தனைக்கு

எதிர்ப்பது ஒன்றே ஏற்றம் மிக்கது வாழ்வில் எதிர்ப்பது தான், ஒன்றின் அகத்தைக் கைப்பற்றி ஆட்கொள்ள வழி

— கனேகோமிட்ஸா ஹடு —

ஈழநாதம்

61, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம் 23-05-1992
தொலைபேசி
ஆசிரிபீடம் 025 2889 நிர்வாகபீடம் 2308
இ. வெ. ஸ் 0?

# எதிர்ப்பதொன்றே எதிர்க்கட்சியின் லட்சியம்

விடுதலைப் புலிகள் இயக்கத்தை இலங்கையிலும் தடை செய்ய வேண்டும் என சிங்கள எதிர்கட்சிகள் முக்கியமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி குரல் எழுப்பியுள்ளது. இது தொடர்பாக சிறிலங்காவின் பாராளுமன்றத்திலும் பெரும் குழப்பமும் அமளி துமளியும் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சி திடீரென விடுதலைப்புலிகளை தடை செய்ய வேண்டும் எனக் கூக்குரல் இடுவதற்குக் காரணம் இந்தியா விடுதலைப் புலிகளை தடை செய்துவிட்டது. நாமும் விடுதலைப் புலிகளைத் தடை செய்ய வேண்டும் என்பதே ஆகும். இதன் மூலம், திரு. பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தைப் பெரும் நெருக்கடிக்குள் தள்ளி அரசை ஆட்டம் காணச்செய்து ஆட்சியைக் கைப்பற்றுவதேயாகும்.

முதலில் விடுதலைப்புலிகளைத் தடை செய்வது ஒருபுறம் இருக்கட்டும். தற்பொழுது விடுதலைப்புலிகள் இயக்கத்தை சிறிலங்கா அரசாங்கமும், எதிர்க்கட்சிகளும் அங்கீகரித்தா உள்ளன. அவ்வாறு விடுதலைப்புலிகள் இயக்கத்தை அங்கீகரித்திருந்தல் பயங்கரவாதிகள் என்று அழைப்பது எதற்காக? விடுதலைப் புலிகளை அழித்துவிட வேண்டும் எனத் தொடர்ச்சியாகப் போர் செய்வதும் எதற்காக? இவைதான் ஒருபுறம் இருக்க அரசாங்கமோ அன்றி எதிர்க்கட்சிகளோ புலிகளுடன் நேரடியாகத் தொடர்பு ஏதாவது கொண்டாகிலும் இருக்கின்றார்களா என்றால் அதுவுமில்லை.

இந் நிலையில் விடுதலைப்புலிகளை சிறிலங்கா தடை செய்வதென்பது கேலிக்கூத்தாகவே அமையும். அதாவது, விடுதலைப்புலிகளை அரசாங்கம் தற்பொழுது அங்கீகரித்ததாகஇல்லை ஆகையினால் தடைசெய்வதால் நன்மைஅடைய என்ன இருக்கின்றது ஆனால், தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்பட வேண்டுமானால் இங்குதான் விடுதலைப் புலிகளின் தேவை அவசியமானது என்பது மட்டும் புறக்கணிக்க முடியாதது.

இதேவேளை விடுதலைப்புலிகளைத் தடைசெய்வதினால், விடுதலைப்புலிகளுக்குள்ள இந்த அங்கீகாரத்தை எவரும் பறித்துவிடமுடியாது. வடக்கு - கிழக்கில் ஒரு லட்சம் இந்திய இராணுவம் குடி கொண்டிருந்தபோதே புலிகளுக்கான இந்த அங்கீகாரத்தைப் பறித்துவிடமுடிய

# நக்சலைட் இயக்கத்திற்கு ஆந்திர அரசு தடை விதிப்பு

## விடுதலைப் புலிகளோடு தொடர்பு உண்டு

(கைதராபாத்)

இந்தியவின் ஆந்திரப் பிரதேச மாநிலத்தில் மக்கள் யுத்தக் குழுஎன்னும்நக்சலைட் போராளிகள் அமைப்பும் அதனுடன் இணைந்த ஏழுதுணை அமைப்புக்களும் தடை செய்யப்பட்டுள்ளன.

இதனை விசாகபட்டனத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ராஜீவ்காந்தி ஓராண்டு நினைவு தினக் கூட்டத்தில் ஆந்திர முதல்வர் ஜனார்த்தன் ரெட்டி அறிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில், ஆந்திர மாநிலத்தில் இடம் பெற்ற தொடர்ச்சியான கண்ணிவெடித் தாக்குதல் சம்பவங்களுக்கும், அவற்றில் பயன்படுத்தப்பட்ட வெடிச் சாதனங்களும் விடுதலைப் புலிகளுக்கும் இந்த அமைப்புகளுக்கும் தொடர்பு இருப்பதை உறுதிப்படுத்துவதாகத் தெரிவித்தார்.

## விலைவாசி உயர்வுகளிலிருந்து

# மக்களைத் திசை திருப்பவே பத்திரிகைகளுடன் போர்

- மு. கருணாநிதி

[சென்னை]

அரிசி விலைஉயர்வு போன்ற முக்கியமான பிரச்சினைகளில் இருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்காகவே ஜெயலலிதா அரசாங்கம் பத்திரிகைகளுடன் போரைத் தொடுத்திருப்பதாகத் தி.மு.க. தலைவர் குற்றம் சாட்டியுள்ளார்

அண்மையில் "நக்கீரன்" வாரப் பத்திரிகை வாசகர் சங்கம் சென்னை எழும்பூரில் ஒழுங்கு செய்திருந்த கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய கருணாநிதி 'அரசாங்கம் சிறிதளவு பெருந்தன்மையைக் காட்டியிருந்தால் இன்று தோன்றியிருக்கும் கேவலமான நிலையைத் தவிர்த்திருக்கலாம். மக்களின் செல்வாக்குடன் பதவிக்கு வந்த எந்த ஒரு கட்சியும் ஜெயலலிதா கட்சிபோல இந்தளவுக்கு விரைவாக மக்களின் ஆதரவை இழக்கவோ பத்திரிகைகளின் ஆத்திரத்தைச் சம்பாதிக்கவோ இல்லை'' என்று குறிப்பிட்டார்.

மேலும், அரசாங்க செயற்பாடுகளை மக்கள் அவதானிப்பதற்கேற்றவாறு பத்திரிகைகளும் எதிர்க் கட்சிகளும் பணியாற்றி உள்ளன. ஆக்கபூர்வமான விமர்சனத்தை ஆளும் கட்சி வரவேற்றிருக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இக்கட்டத்திற் [illegible] நக்கீரன் தாக்கிப் பேசிய '[illegible]' பத்திரிகை ஆசிரியர் [illegible] ரம் பேசுகையில் அரசாங்கத்தின் சகிப்புத்தன்மை [illegible] தினாலேயே தற்[illegible] நெருக்கடி உருவாகியு[illegible]. மாமாம் துபரச் சம்பவத்துக்குப் பின்னர் அரசின் பொறுமை இன்மை மேலும் அதிகரித்து விட்டது என்று கூறியதுடன் பத்திரிகையாளர் எதேச்சதிகாரப் போக்குகளுக்கு எதிராகத் துணிந்து நிற்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

## வாழப்பாடி ராமமூர்த்தி

# மீண்டும் மத்திய அமைச்சர் நியமனம் பெறலாம்?

(சென்னை)

தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி கே. இராமமூர்த்தி மீண்டும் மத்திய அமைச்சரவையில் இடம் பெறுவாரா எனகேள்வி எழுப்பப்படுகிறது.

இது தொடர்பாக அண்மைக் காலமாக வதந்திகள் அடிபடுகின்ற போதிலும் சென்னையில் நடைபெற்ற கைத்தறிநெசவாளர் மாநாட்டில் குமாரமங்கலம் ஜெயலலிதாவிற்கு இது தொடர்பாகஏதும் தகவலைகொடுத்திருப்பாரோ என்று மாநாட்டில் கலந்து கொண்ட பலரும் எண்ணினர்.

# எயிட்ஸ் நோயாளிகள் பஞ்சாப்பில் அதிகமாம்?

இந்தியாவில் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை பஞ்சாப் மாநிலத்திலேயே அதிகரிக்கப் பட்டுள்ளதாக பஞ்சாப்மாநில சுகாதார திணைக்களம் புள்ளி விபரரீதியானசெய்தியைவெளியிட்டுள்ளது.

எச். ஐ. வி. காரணி மூலம் பரவும் இந்நோயினால் அதிகளவில் ஆண்களே பாதிக்கப்பட்டுள்ளதாக 'இந்துப்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நோயானது அயல்நாடுகளில் இருந்து வரும் வெளிநாட்டவர்களாலேயே பரவி வருவதாகத் தெரிவிக்கிறது.

1992ஆம் ஆண்டு இறுதியில் இந்நோய் பஞ்சாப்பில் மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு தோன்றியுள்ளதாகவும் அச் செய்தி மேலும் தெரிவித்தது. (05)

# காவிரிநீர் பிரச்சினைக்கு விரைவில் சுமுகமான தீர்வு

-பி. வி. நரசிம்மராவ்

(டில்லி)

காவிரி ஆற்று நீர் பங்கீடு தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு ஒன்றினைக் காண்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவையும், கர்நாடக முதலமைச்சர் பங்காரப்பாவையும் விரைவில் அழைத்துப் பேச உள்ளதாக இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் தமிழ் நாடு காங்கிரஸ் எம். பிக்கள் குழுவொன்றிடம் கடந்த வாரம் உறுதியளித்துள்ளார்.

குறுவை பயிர்ச் செய்கைக்கு ஜூனில் தமிழ் நாடு விவசாயிகள் நீரைப் பெறுவதற்கு வசதியாக காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை நடைமுறைப் படுத்துமாறு கர்நாடக மாநில அரசை வலியுறுத்துவதற்கு பிரதமர் தமது நல்லெண்ணத்தை பயன் படுத்த வேண்டுமென கோரிக்கை விடுத்த போதே அவர் இவ் உறுதிமொழியை அளித்ததாக குழுவின் ஓர் உறுப்பினரான இரா. அன்பரசு தெரிவித்தார்.

காவிரி நீர் பிரச்சினைக்கு உரிய காலத்தில் தீர்வு காண்பதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படும் என்பதால் பிரச்சினையை சிக்கலாக்கக் கூடாது என பிரதமர் இவர்களிடம் வலியுறுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

30 நிமிட நேரம் நீடித்த இச் சந்திப்பில் தமிழ் நாடு காங்கிரஸைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

# தமிழக அரசு மாநில நிர்வாகத்தைச் சீராக்கக் கவனியுள்ளது

# அணுகுண்டு பரிசோதனை சீனா நடத்தியுள்ளது

(பீகிங்)

சீனா அதன் வடபகுதியில் நிலத்திற்கு அடியிலான சக்தி வாய்ந்த அணுப் பரிசோதனை ஒன்றை நடத்தியுள்ளது. நோர்வே நாட்டின் பாதுகாப்பு ஆராய்ச்சிப் பிரிவு தெரிவித்த தகவலின் படி இப் பரிசோதனை நேற்று முன்தினம் காலை நடத்தப்பட்டது எனவும் ஆயிரம் கிலோ எடையுள்ள அணுக் குண்டு வெடிக்க வைக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது. 1970 ஆம் ஆண்டிற்குப் பின்னர் சீனா மேற்கொண்ட மிகப் பெரிய அணு சோதனை இது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# எல்லைப் பிரச்சினைக்கு அமைதி வழி தீர்வு தேவை

## சீனா-இந்தியா வற்புறுத்து

(பீகிங்)

இந்தியாவும், சீனாவும் தமக்கிடையே நிலவும் எல்லைப் பிரச்சினைகளுக்கு அமைதி வழியில் படை பலத்தைப் பயன்படுத்தாத ஒரு வழியில் தீர்வு காணப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன.

தற்போது சீன விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் பீகிங்கில் பிரதமர் லீ. பெங்கை சந்தித்து உரையாடினார். அப்போது மேலும் வளரும் நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பு வலுப் படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

அத்துடன் சீனக்கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளருடன் இந்திய ஜனாதிபதி வெங்கட்ராமன் நடத்திய பேச்சுக்களின் போது மாறிவரும் உலகச் சூழ்நிலையை இருதரப்பு உறவுகளையும் - பொருளாதார உறவுகளையும் மேலும் வலுப் படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் உதவி மற்றும் பொருளாதார உறவுகள் நிபந்தனைகளுக்கு உட்படுத்தப்பட்டவையாகலாகாது எனவும் இரு தலைவர்களும் வலியுறுத்தினர் மேலும் மனித உரிமைகள் எல்லா நாடுகளிலும் மதிக்கப் பட வேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

# 6 மாதச் சிறைத்தண்டனை

(சென்னை)

சென்னையில் மோட்டார் சைக்கிளைத் திருடிய இலங்கை வாலிபர் சதீஸ்குமாருக்கு [22 வயது] ஆறுமாத கடுங்காவல் தண்டனை விதித்த எழும்பூர் நீதிமன்ற நீதிவான் தண்டனை முடியும் காலத்தில் இவரை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார்.

## மாநிலங்களவைக்கு தேர்தல்

(டில்லி)

இந்திய மாநிலங்கள் அவையில் எதிர்வரும் ஜூன்

எவரும் பறித்துவிடமுடியாது. வடக்கு - கிழக்கில் ஒரு லட்சம் இந்திய இராணுவம் குடி கொண்டிருந்தபோதே புலிகளுக்கான இந்த அங்கீகாரத்தைப் பறித்துவிடமுடியவில்லை. இனிமேலும் இவ் அங்கீகாரத்தை எவரும் பறித்துவிட முடியாது. இந் நிலையில், இலங்கையில் விடுதலைப்புலிகளை தடை செய்வதினால், லாபம் எதுவும் சிறிலங்காவிற்குக் கிட்டிவிடப் போவதில்லை.

அத்தோடு இந்தியா விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடை செய்துவிட்டது. சிறிலங்காவும் தடை செய்ய வேண்டும் எனக் கோரும் அரசியல்வாதிகள் எவரும் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று அண்மையில் எட்டப்படுவதை விரும்பவில்லை என்பதும் வெளிப்படை. இந்தியா விடுதலைப்புலிகளைத் தடை செய்ததென்பது இந்தியாவின் நலனை அடிப்படையாகக் கொண்டதே ஒழிய சிறிலங்காவின் நலனைஅடிப்படையாகக் கொண்டதல்ல. சிறிலங்கா எப்பொழுதும் தனதுபிடிக்குள் இருக்கவேண்டும்என இந்தியா எண்ணுகின்றது. இதற்காகஇந்தியாவில் தங்கியுள்ள பலவீனமான அரசு சிறிலங்காவில் இருக்க வேண்டும், என்றும் இலங்கையில்எப்பொழுதும் உள்நாட்டுப்போர் தொடர்ந்து நடந்து கொண்டிருக்க வேண்டும் என்றும், இதனால் தனது பிராந்திய நலன் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் இந்தியா எண்ணுகின்றது இதன் அடிப்படையிலேயே புலிகள் மீது தடை விதித்து சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் எதுவும் நடைபெறாத வகையில் முட்டுக்கட்டைகளைப் போட இந்தியா முற்படுகின்றது. இதன் மூலம் நீடித்த போர் ஒன்றில் சிறிலங்கா அரசாங்கம் ஈடுபட்டு நலிவடைய வேண்டும் என இந்தியா எதிர்பார்க்கிறது.

ஆனால் இதனைச் சிங்கள எதிர்க்கட்சிகள் விளங்கிக் கொள்வதாக இல்லை. விளங்கிக் கொண்டாலும் அது குறித்து அக்கறை காட்டுவதாக இல்லை. ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்தைக் கவிழ்ப்பது என்பது மட்டுமே எதிர்க்கட்சிகளின் நோக்கமாகத் தெரிகின்றதே ஒழிய நாட்டின் நன்மை குறித்து அவை சிந்திப்பதாக இல்லை.

இதேவேளை சிறிலங்காவில் ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கமாக இருந்தால் என்ன, சிறிலங்கா சுதந்திரக் கட்சியாக இருந்தால் என்ன தமிழர் தேசியஇனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே காணப்பட முடியும். இந்தியாவின் விருப்பத்தின் பேரிலோ அன்றி சிறிலங்காவின் எண்ணத்தின் அடிப்படையிலோ இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒன்று கண்டுவிட முடியாது அத்தோடு பிரச்சினைக்கான தீர்வை விடுதலைப் புலிகள் இன்றிக் கண்டுவிட முடியாது என்பதும் தெளிவு, இந்நிலையில் விடுதலைப்புலிகளை தடை செய்வதினால் சிறிலங்கா லாபமடைவதைவிட பெரும் நட்டமே அடையும். இது இலங்கையில் நீடித்த போருக்கும், அமைதியின்மைக்கு மேவழி வகுக்கும் என்பதே உண்மையாகும்.

---

அடிப்படுகின்ற போதிலும் சென்னையில் நடைபெற்ற சைத்தறி நெசவாளர் மாநாட்டை அங்குரார்ப்பணம் செய்து வைத்து உரையாற்றிய முதலமைச்சர் ஜெயலலிதா, இராமமூர்த்தியை 'எதிர்கால அமைச்சர்'' என விளித்துப் பேசியது பலரையும் சிந்திக்கத் தூண்டியுள்ளது.

இந்த மகா நாட்டில் முன்னதாக உரையாற்றிய மத்திய இணையமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலமும் இராமமூர்த்தியை ''எதிர்கால அமைச்சர்'' என்று தான் வர்ணித்தார்.

# சீராக்கத் தவறியுள்ளது

## - ஜனா கிருஷ்ணமூர்த்தி

[சென்னை]

தமிழக அரசு மாநில நிர்வாகத்தைச் சீராக்கத் தவறியிருப்பதாக பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ்நாடு கிளையைச் சேர்ந்த ஜனா கிருஷ்ணமூர்த்தி கூறியுள்ளார்.

கோயம்புத்தூரில் செய்தியாளர்களிடையே பேசிய அவர், அரசியல் ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் சீரான நிர்வாகம் தற்போது தமிழகத்தில் இல்லை என்று குறிப்பிட்டதுடன், சட்டப் பேரவையில் வலுவான எதிர்க்கட்சி இல்லாததால் இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

யூகோ செலவாக்கிய

# பெடரல் இராணுவத்திற்கு பாதுகாப்புச் சபை கண்டனம்

(ஜெனிவா)

யூகோஸ்லாவியாவின் செர்பியர்களை பெரும்பான்மையாக பெடரல் இராணுவத்தினரின் நடவடிக்கைகள் சமாதானம் ஏற்படுவதற்கு இடைஞ்சலாக இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சில் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளது.

பெல்கிரேட்டில் உள்ள அதிகாரிகள் விடயங்களைக் குழப்பிவருவதாகவும், இதனால் விரும்பத்தகாத விளைவுகள் ஏற்பட்டு ஐ. நா, சமாதானப் படையினர் பெருமளவில்பாதிக்கப்படுவதாகவும், ஐக்கியநாடுகள் சபையின் செயலாளர் பூட்டிரஸ் காலி தமது அறிக்கையில் குறிப்பிடுள்ளார்.

இசுரேலியா விமானங்கள்

# தென் லெபனானில் உள்ள முகாம்கள் மீது தாக்கின

(டெல்அவிவ்)

இசுரேலிய விமானங்கள் தெற்கு லெபானனில் இருக்கும் ஈரானிய ஆதரவு ஹிஸ்புல்லா போராளிகளின் முகாம்கள் மீது நான்கு தடவைகள் தாக்குதல் நடத்தியிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதலில் ஒன்பது போராளிகள் கொல்லப்பட்டனர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. தென் லெபனானில் இருக்கும் பாதுகாப்பு வலயப் பகுதிகளிலுன் இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

டெல் அவிவ்விலுள்ள இராணுவ வட்டாரங்கள் கருத்து வெளியிடுகையில் தென் லெபனானில் இருக்கும் கெரில்லாக்களின் நடவடிக்கைகளையிட்டு இசுரேல் எச்சரிக்கையுடனிருப்பதாக தெரிவித்தன.

# மலைவாசிப் பெண்களோடு ஜெயலலிதா நடனம்

தமிழ் நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா ஊட்டியில் மலைவாசிப் பெண்களுடன் சேர்ந்து நடனமாடினார்

ஊட்டியில் கடந்த ஞாயிறு நடைபெற்ற காணிவேல நிகழ்ச்சியின் போது கலந்து கொண்ட ஜெயலலிதாவை அங்கு நடனம் ஆடவந்த பழங்குடி பெண்கள் தங்களுடன் நடனம் அடவருமாறு அழைத்ததனைத் தொடர்ந்து அவர்களுடன் சுமார் பத்து நிமிடம் வரை செல்வி ஜெயலலிதா சேர்ந்து நடனம் ஆடினார்.

கர்நாடக மாநிலம்

# ராம்புரா பொலிஸ் மீது தாக்குதல் ஐவர்; பலி ஆயுதம் அபகரிப்பு

(பெங்களூர்)

கர்நாடக மாநில காட்டில் வீரப்பன் தலைமையிலான யானை கொல்லும் கோஷ்டியினர் 5 பொலிஸ்காரர்களை கொலை செய்துள்ளனர். அத்துடன் அவர்களிடமிருந்த ஆயுதங்கள், மற்றும் ரவைகளையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

குறைந்தது 350 யானைகளைக் கொன்றிருப்பதாகவும் சந்தனமரம் கடத்துவதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள வீரப்பன் கடந்த இரண்டு வருடங்களாக பொலிஸாரின் பிடியில் அகப்படாமல் தப்பி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று முன்தினம் அதிகாலை ராம்புரா என்ற இடத்திலுள்ள பொலிஸ் நிலையத்தை வீரப்பனது கோஷ்டியினர் தாக்கியதுடன் ஐந்து பொலிஸாரைக் கொன்றதுடன் அவர்களின் ஆயுதங்களையும் எடுத்துச் சென்றுள்ளதாக அப் பொலிஸ் நிலையத் தலைவர் எஸ். டி. ரமேஷ் தெரிவித்துள்ளார்.

வீரப்பனை கைது செய்ய உதவுவோருக்கு 1, 00, 000 ரூபா பரிசளிக்க பொலிஸார் முன் வந்திருக்கிறார்கள்.

வீரப்பனும், அவனது குழுவினரும் கேரளம், கர்நாடகம், தமிழ்நாடு ஆகியவற்றின் எல்லைப் புறத்திலிருக்கும் காட்டுப்பகுதியில் மறைந்திருப்பதாக கூறப்படுகிறது.

# இலங்கைத் தமிழ் அகதிகள் தொடர்ந்தும் கண்காணிக்கப்படுவர்

இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரும் சட்டத்தையும் ஒழுங்கையும் கண்காணிக்கும் அதிகாரிகளின் தொடர்ச்சியான கண்காணிப்பிற்கு உள்ளாவர் என்று இந்திய உள்துறை இணை அமைச்சர் எம்.எம். ஜேக்கப் அறிவித்துள்ளார்.

இந்தியாவில் புலிகள்மீதான தடை உத்தரவைக் காத்திரமான வகையில் செயற்படுத்துவதற்காக புலிகளுடன் தொடர்புடையவர்களின் நேரடியான மறைமுகமான செயற்பாடுகள் யாவும் கண்காணிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

---

இந்திய மாநிலங்கள் அவையில் எதிர்வரும் ஜூன், ஜூலை மாதங்களில் காலியாக இருக்கும்நாற்பத்தைந்து இடங்களுக்கான தேர்தலை நடத்த தேர்தல் கமிசன் அறிவிப்பு செய்துள்ளது.

உத்தரப் பிரதேசத்திலிருந்து பன்னிரண்டு இடங்களும், பீகாரிலிருந்து ஏழு இடங்களும் தமிழ்நாடு மகாராஷ்டிரா மாநிலங்களிலிருந்து தலா ஆறு இடங்களும் மத்திய பிரதேசத்திலிருந்து ஐந்தும் ராஜஸ்தானிலிருந்து நான்கும் ஒரிசாவிலிருந்து மூன்றும் பஞ்சாபிலிருந்து இரண்டு இடங்களும் நிரப்பப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அடுத்த மாதம் எட்டாம் திகதி முதல் வேட்பு மனுத்தாக்கல் செய்யப்படலாம் எனவும் தேவைப்பட்டால் ஜூன் 25-ல் தேர்தல் நடத்தப்படலாம் எனவும் தெரியவருகிறது

ஈழநாதம்

# வாகரை மக்கள் பெரும் அவதி

# அன்றாட வாழ்வு பாதிப்பு

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டம் வாகரைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் பல்வேறு தடைகள் காரணமாக அங்குள்ள மக்கள் பெரும் துன்பத்தை அனுபவித்து வருகின்றனர். இத்தடைகளால் மக்கள் அன்றாடம் உணவுக்குகூட வழியின்றி தவிக்கின்றனர்.

கடந்த சில வாரங்களாக கூட்டுறவுச் சங்க கிளைகளுக்கு உணவுப் பொருள்கள் எவையும் அனுப்பி வைக்கப்படவில்லை இவற்றை மாங்கேணி இராணுவத்தினர் தடுத்து வைத்துள்ளனர். வாகரை கூட்டுறவுச் சங்கக் கிளையில் ஓரளவு உணவுப்பொருள்கள் இருந்தாலும் அக்கிளை இராணுவ முகாமிற்கு அண்மையில் இருப்பதால் மக்கள் உணவுப் பொருள்களை வாங்குவதற்குச் செல்ல அஞ்சுகின்றனர் இதனால் அப்பகுதியில் அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு பெரும்தட்டுப்பாடு நிலவுகிறது.

இப்பகுதியில் கடமையாற்றும் அரச உத்தியோகஸ்தர்களை தங்கள் கடமைகளைச் செய்ய விடாமல் சிறிலங்கா இராணுவத்தினர் தடுத்து வருகின்றனர் கடந்த 13ஆம் திகதி வாகரைப் பகுதிக்குச் செல்ல முயன்ற உதவி அரசாங்க அதிபரை மாங்கேணி இராணுவத்தினர் செல்லவிடாது தடுத்து விட்டனர் அத்துடன் வாகரை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தை இராணுவத்தினர் உடைத்து கடமைகள் எதுவும் நடைபெறவிடாது தடுத்து விட்டனர். கிராமசேவை அலுவலகர்களும் தத்தமது பகுதிகளுக்குக் கடமைக்குச் செல்லவிடாது தடுக்கப்பட்டுள்ளனர்.

அப்பகுதியில் மக்களின் போக்குவரத்துகள் தடுக்கப்பட்டுள்ளன போக்குவரத்துச் சேவைகள் எதுவும் நடைபெறுவதில்லை. அத்துடன் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரைதான் மக்கள் நடமாட்டம் கூட அனுமதிக்கப்பட்டுள்ளது [illegible]

வாகரைப்பகுதியில் மக்கள் [illegible] இராணுவத்தினராலும் ரெலோ தேசத்தப்பர்களாலும் தாக்கப்பட்டு வருகின்றனர். வாகரை இராணுவ முகாமிற்கு அண்மையிலுள்ள பொது மக்களின் வீடுகள் சிறிலங்கா இராணுவத்தினரால் உடைக்கப்பட்டு பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.

## இ. தொ. கா. மாநாடு

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் பதுளை மாநில மாநாடு நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணியளவில் பதுளை சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது

# சுவாமி விபுலானந்த அடிகள் நூற்றாண்டு விழா, கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

விபுலாநந்த அடிகள் நூற்றாண்டு விழாவும் நூற்கண்காட்சியும் நல்லூர் பொதுசன நூலகம், நாவலர் மண்டபத்தில் எதிர்வரும் 24-ம், 25ஆம், 26ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

யாழ் மாநகரசபை நடாத்தும் மேற்படி நிகழ்வில் ஞாயிறு காலை 9.30ற்கு பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் நூற்கண்காட்சியைத் திறந்துவைக்கவுள்ளார். 9.45 ற்கு சிவநெறிப்புரவலர் க. கனகராசா அவர்கள் அடிகளாரின் உருவப்படத்தினைத் திரை நீக்கம் செய்துவைக்கின்றார். முதல்நாள் காலை நிகழ்வுகளுக்கு மாநகர ஆணையாளர் திரு வே.பொ. பாலசிங்கம் தலைமை தாங்குகின்றார்

அன்று மாலை நிகழ்ச்சிகள் பிரதேசச் செயலாளர் திரு. க. குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் விபுலாநந்த அடிகளாரின், சமூகச்சார்பு நடவடிக்கைகளும் அவரது ஆக்கங்களின் தொழிற்பாடுகளும் எனும் தலைப்பில் யாழ்பல்கலைக் கழகமுது நிலைவிரிவுரையாளர் கலாநிதி இ.பாலசுந்தரம் சிறப்புரை ஆற்றுகிறார் 25ம் திகதி இரண்டாவது நாள் நிகழ்வுகள் யாழ்பல்கலைக் கழக சமூக மருத்துவத்துறைத் தலைவர் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) தலைமையில் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகிறது. இதில் அடியார்க்கு நல்லார் தனஞ்சயன் ஷேக்ஸ் பியரிடையே விபுலாநந்தர்'' மதங்க சூளாமணி பற்றிய ஓர் ஆய்வுச்சிறப்புரையை யாழ்பல்கலைக் கழக நுண்கலைத் துறைத்தலைவர் பேராசிரியர் கா.சிவத்தம்பி ஆற்றுகிறார்.

செவ்வாய்கிழமை நடைபெறவுள்ள அடிகளார் நூற்றாண்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வுகள் மாலை 4 மணிக்கு யாழ்சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர் வண பிதா பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ளது அன்று தொடக்கவுரையை திரு.க.சொக்கன் ஆற்றுகிறார். தொடர்ந்து திரு பொன் சுந்தரலிங்கத்தின் பாவிசையும் விபுலாநந்தரும் இலக்கியமும் எனும்பொருளில் யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் சிறப்புரை ஆற்றவுள்ளார்.

# மன்னார் மாவட்டத்தில் மருந்துவகைகள் தட்டுப்பாடு

மன்னார் மாவட்டத்திற்கு 1992 ஆம் ஆண்டின் 2 ஆம் காலாண்டிற்குரிய மருந்து வகைகள் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அங்குள்ள வைத்தியசாலைகளில் மருந்துவகைகளுக்கு பெருந்தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் நோயாளிகள் பெரும் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர்.

அத்துடன் மடு அகதிமுகாமிலுள்ள மக்களுக்கு போதிய தடுப்பு மருந்துகள் கிடைக்காமையால், சொறி, சிரங்கு, வயிற்றோட்டம் முதலிய தொற்று நோய்கள் வேகமாக பரவி வருகின்றன.

## முல்லைத்தீவில்

# முறைசாரா கல்விப் பிரிவு யூன் மாதம் முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவில் முறைசாராக்கல்வித் திட்டத்தின் கீழ் சுமார் 8 பாடசாலைகளில் 12 பயிற்சி நெறிகளை யூன் மாதத்தில் ஆரம்பிக்க முறைசாராக்கல்விபபிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் ஆடையமைத்தல், றேடியோ, தொழில் நுட்பம், உணவுபதனிடல் ஆகிய பயிற்சி நெறிகளும், மல்லாவி மகாவித்தியாலையத்தில் ஆடையமைத்தல், பாண்டியன்குளம் மகாவித்தியாலையத்தில், ஆடையமைத்தல், விவசாயத் தொழில்நுட்பம், திருமுருகண்டி அ.த.க பாடசாலையில், புத்தகம் கட்டுதல் புதுக்குடியிருப்பில் இயங்கும் முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் பன்னவேலை, புத்தகம் கட்டுதல், முள்ளிவாய்க்கால் அ.த.க. பாடசாலையில் ஆடையமைத்தல் உடையார்கட்டு அ.த.க. பாடசாலையில் விவசாய நெறியும் நடாத்தப்பட உள்ளது.

இப்பயிற்சி நெறிகளைப் பயில்வதற்கு பாடசாலையில் இருந்தும் விலகியோரிடம் இருந்தும் போதனாசிரியர் பதவிக்கும். விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் அந்தந்த பாடசாலை அதிபர்களிடம் சமர்பிக்கப்படுதல் வேண்டும் என கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது. (பா)

# ஐ. நா. சர்வதேச சிறுவர் நிதிய பிரதிநிதி இலங்கை விஜயம்

ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர் நிதிய பிரதிநிதி திரு. ஜேம்ஸ் பீ. கிறான்ற் மூன்றாம் மண்டல நாடுகளிற்கு விஜயத்தை மேற்கொண்டுள்ளார். பாகிஸ்தானில் தற்போது தங்கியிருக்கும் இப் பிரதிநிதி அடுத்த மாதம் முதலாம் திகதி இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ள விருப்பதாக ''இந்து'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கையினால் பாதிப்படைந்த குழந்தைகளது நலனை பாதுகாப்பதன் பொருட்டும், மறுவாழ்வு திட்டத்திற்கான நிதியுதவியை அளிக்கும் பொருட்டே இவ் விஜயத்தை மேற்கொள்கின்றார் என அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

திரு பீ. கிறான்ற் பங்களாதேஷ், இந்தியா நாட்டின் தலைவர்களைச் சந்தித்து பாதிக்கப்பட்ட பகுதியினது புள்ளி விபரங்களை திரட்டியுள்ளார்.

பாராளுமன்ற

யில் கூடி இது தொடர்பாக எழுந்துள்ள நிலைமை குறித்து ஆராய்ந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இந்தக் கருத்து மோதலுக்கு ஒரு சுமுகமான முடிவு ஏற்படும் வரை பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் அடுத்த அமர்விற்கான திகதியும் நிர்ணயிக்கப் படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டது.

அப்போதைய சூழ்நிலையில்

# இன்ஸ்பெக்டருக்கு எதிராக சார்ஜன்ட் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

பொலிசார்மீது பொலிசார் தொடர்ந்தவழக்கைத் தொடர்ந்து நடத்துவதா இல்லையா என்ற தீர்ப்பை கொழும்பு [illegible] மா அதிபரின் ஆலோசனை பெறவேண்டியிருப்பதால் அவகாசம் தரும்படி கோரினார்.

இந்த வழக்கில் மோதரைப்

# வலைப்பந்தாட்ட போட்டி

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடாத்தப்பட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் அரை இறுதிப் போட்டிகள் இன்று யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவிருக்கும் இரண்டாவது போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து நவாலி மூரசொலி அணி ஆடவுள்ளது. பிற்பகல் 3.00 மணிக்கு இடம்பெற உள்ள முதலாவது போட்டியில் தெல்லிப்பளை கிளாலி கொப்பர்ஸ் அணியை எதிர்த்து பாசையூர் சென் அன்ரனீஸ் அணி ஆடவுள்ளது

# சேவை நலன் பாராட்டு

(யாழ்ப்பாணம்)

வட்டு. திருஞானசம்பந்த வித்திபாசாலையில் 12 வருடங்களாக அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் அதிபர் உயர்திரு.க சிவவாகீசர் அவர்களுக்கான சேவை நலன் பாராட்டு விழா இன்று மாலை வட்டு. திருஞான சம்பந்த

# சந்திரசேகரன் மீது குற்றப்பத்திரிகை தாக்கல்

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெரியசாமி சந்திரசேகரன், உபதலைவர் தங்கவேல் தர்மலிங்கம் செயலாளர் பாவா அப்துல்காதர் ஆகியோருக்கு கடந்த 8ம் திகதி குற்றப்பத்திரிகைகள் கையளிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை நேற்றுக் காலை கண்டி மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இம் மூவரது வழக்கு விசாரணையின் போது இம் மூவரையும் கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி உபாலி வி. இஸட். குணவர்த்தனா உத்தரவிட்டார்.

கொழும்பில் தடுப்புக் காவலில் இருந்த இம் மூவரையும் கண்டி மேல் நீதிமன்றத்திற்கு கொண்டு வந்ததையிட்டு நீதிமன்றத்திற்குள்ளே பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருந்தது

சந்தேக நபர்கள் சார்பில் ஆஜராகிய சிரேஷ்ட சட்டத்தரணி ஆர் ஜ. உபயசேகரா இவ்வளவு காலமும் சந்தேக நபர்களை போகம்பரையில் வைப்பதே வழக்கம் எனினும் இவர்களை கொழும்பு மகஸின் சிறையிலேயே வைக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

இதையடுத்து நீதிபதி அவர்களை மகஸின் சிறையில் வைக்க உத்தரவிட்டதுடன் இந்த வழக்கு விசாரணையை எதிர்வரும் செப்டெம்பர் 2-ம் திகதிக்கு ஒத்திவைத்தனர்.

புலிகளை

களைச் சுட்டிக்காட்டிய அவர் இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்தபோது சிறிலங்கா சுதந்திரக்கட்சி எதிர்த்ததெனவும் அக்கட்சி கடைப்பிடித்த கொள்கையே வன்முறையும் இரத்தக்களரியும் ஏற்படக் காரணம் எனவும் தெரிவித்தார்.

மேலும் அவர் ''இன்று வடக்கிலும், கிழக்கிலும் என்ன நடைபெறுகிறது? எனது தகவலின்படி மாண்புமிகு காமினி திசாநாயக்கா வேறுபட்ட கருத்தைக் கொண்டவராயினும் ஜனாதிபதி பிரேமதாசா அவர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தையைமேற்கொண்டுசரியான நடவடிக்கை எடுத்துவருகின்றார். விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் புறந்தள்ளிவிட்டு வடக்கிலும், கிழக்கிலும் எவ் [illegible] தில் பேசியதையும் சுட்டிக் காட்டினார்.

மேலும் புலிகளுக்கு உள்ள மக்கள் பலம் பற்றி பிரஸ்தாபித்த அவர் 'வடக்கு மாகாணத்தில் நடந்த பாராளுமன்றத் தேர்தல்களின் பெறுபேறுகளை உற்று நோக்குமிடத்து விடுதலைப் புலிகளின் ஆதரவோடுதான் ஈரோஸ் குழுவினர் வடக்கில் சகல தொகுதிகளிலும் வெற்றிகாண முடிந்தது' என்பதையும் எடுத்துக் காட்டினர்.

மேலும் 'மாண்புமிகு லலித் அத்துலத்முதலி அவர்களுக்கு நன்கு தெரிந்தவாறு விடுதலைப் புலிகளைப் புறந்தள்ளிவிட்டு வடக்கிலும், கிழக்கிலும் என்றுமே சமாதானம் உருவாக முடியாது" எனவும் தெரிவித்தார்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இன்றைய போக்கை கண்டனம் செய்த பிரதமர் அன்று

அடுத்த அமர்விற்கான திகதியும் நிர்ணயிக்கப் படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டது.

அப்போதைய சூழ்நிலையில் கருத்து வெளியிட்ட சுதந்திரக் கட்சியின் பிரதம கொறடா ரிச்சார்ட் பத்திரனா - பாராளுமன்றத் தெரிவுக் குழுவை பகிஷ்கரிப்பது தொடர்பாக நாம் எந்தவித தீர்மானத்தையும் எடுக்கவில்லை. ஆனால் பாராளுமன்றத்தில் ஆளும் கட்சி எதிரணிக்கட்சிகளுடன் ஒத்துழைக்காவிட்டால் தொடர்ந்தும் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்க வேண்டுமா என்பதை தீர்மானிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் எனத் தெரிவித்ததுடன் சுதந்திரக் கட்சியின் வேண்டுகோளின் பேரிலேயே தெரிவுக்குழு நியமிக்கப்பட்டது.

எமது கட்சியின் சார்பில் இப்பிரச்சினைக்கு தீர்வை முன் வைக்கவும் நாம் ஆலோசித்து வருகிறோம் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

## மன்னார்

24 ஆம் திகதி மன்னாரில் ஆரம்பமாகிய பசிலசப்பட்டி இராணுவ நடவடிக்கையை அடுத்து இடம்பெயர்ந்து மடு அகதிமுகாமில் தங்கியிருந்த 1,400 குடும்பங்கள் மீண்டும் தங்கள் சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ளன.

தேஷ், இந்தியா நாட்டின் தலைவர்களைச் சந்தித்து பாதிக்கப்பட்ட பகுதியினது புள்ளி விபரங்களை திரட்டியுள்ளார்.

மேலும் இவர் நாடுகளிற்கான விஜயத்தை மேற்கொண்டு நாடு திரும்பிய பின்னர் தாம் வெகு விரைவில் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் மறுவாழ்வுக்கு கூடியளவு நிதியை தமது நிதியம் மூலம் வழங்க முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

# பல்கலை. மாணவருக்கு கொடுப்பனவு அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கான ''பேர்சறி'' மாதாந்த உதவிப் பணக்கொடுப்பனவு 300 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக நலச்சேவைகள் பிரிவு அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் 550 ரூபாவாக இருந்த இக்கொடுப்பனவு தற்போது 850 ரூபாவாக வழங்கப்படவுள்ளது.

இக்கொடுப்பனவுகள் யாவும் கடந்தகாலங்களில் வழங்கப்படாத முழுக்கொடுப்பனவும் சேர்ந்து ஆறுமாதமாக முதலாம் வருடமாணவர்களுக்கு இருவாரங்களின் பின்னர் வழங்க நலச்சேவைகள் பிரிவு தீர்மானித்துள்ளது (0ஓ(

## இராணுவ

விசாரணை மேற்கொள்கின்றனர்.

இந்தியாவிலிருந்து வந்து வவுனியா அகதி முகாம்களில் தங்கியிருக்கும் மக்களும் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களும் அடிக்கடி விசாரணைக்குட்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. [தி)

(கொழும்பு)

பொலிசார்மீது பொலிசார் தொடர்ந்தவழக்கைத் தொடர்ந்து நடத்துவதா இல்லையா என்ற தீர்ப்பை கொழும்பு மேலதிக நீதிவான் திருமதி ஜராங்கனி பெரேரா எதிர்வரும் ஜுலை 30 ஆம் திகதி வழங்கவுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இந்தவழக்கு விசாரணைக்கு வந்தபோது முறைப்பாட்டாளர் தரப்பில் ஆஜரான பொலிஸ் அத்தியட்சகர் சட்ட

## வற்றாப்பளை

பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்திருக்கிறது.

நான்கு எறிகணைகள் கோவிலடியில் விழுந்து வெடித்ததை நேரில் கண்டவர்கள் இந்தக் குழு முன்னிலையில் சாட்சியமளிக்கவிருக்கிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதல் புலிகளின் மீது நடத்தப்பட்டதாகவும், ஒன்பது பேர் கொல்லப்பட்டதாகவும் இராணுவ தரப்பில் கூறப்படுகிறது.

வெளிவிவகார அமைச்சு அறிக்கையில் கூறியுள்ளபடி டி.பி. ஜயலத் இந்த விசாரணைக் குழுவின் தலைவர். மேஜர் ஜெனரல் பாலரட்ண ராஜா, பாராளுமன்ற உறுப்பினர் மஜீத் ஆகியோர் இந்த விசாரணைக் குழுவின் உறுப்பினர்கள்.

மா அதிபரின் ஆலோசனை பெறவேண்டியிருப்பதால் அவகாசம் தரும்படி கோரினார்.

இந்த வழக்கில் மோதரைப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஊர்காவல்படை வீரர் ஒருவரைத் தாக்கி சிறுகாயம் விளைவித்ததாகவும், துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தியதாகவும் சங்கிலியை அறுத்ததாகவும் விசேட பொலிஸ் பிரிவைச்சேர்ந்த சிரேஷ்ட இன்ஸ்பெக்டர் முனதாச, சார்ஜன்ட் கான்ஸ்டபிள் களுபஹன ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

# செஞ்சோலை பாடசாலை விளையாட்டுப் போட்டிகள்

சண்டிலிப்பாய் செஞ்சோலை மகளிர் பாடசாலையின் இல்லத் தடகள விளையாட்டுப் போட்டிகள் நேற்று வெகு சிறப்பாக இடம் பெற்றன. பச்சை, மஞ்சள், ஊதா இல்லங்களிடையேயான இத் தடகள விளையாட்டுப்போட்டிகள் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

செஞ்சோலை செயற்திட்ட பொறுப்பாளர் ஜனனி தலைமையில் நடைபெற்ற இவ் விளையாட்டுப் போட்டிகளில் ஊதா இல்லம் முதலிடத்தைப் பெற்றது.

பரிசளிப்பு விழாவில் செல்வி ஜெனா, செல்வி ஜெபா, திரு. அன்ரன் பாலசிங்கம், திருமதி அடல்பாலசிங்கம், திரு.யோகி, திரு மூர்த்தி, திரு. இளங்குமரன் ஆகியோர்கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினர்.

## றெட்பானா

ஆகிய அதிகாரிகளே இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர். இவர்களுடன் றெட்பானா கொழும்பு அலுவலகத்தைச் சேர்ந்த திரு. சோதிராஜா அவர்களும் வருகை தந்திருக்கிறார்,

இவ்வதிகாரிகள் குழுவினர் நேற்று யாழ. மாவட்டமேலதிக அரசாங்க அதிபர் திரு. சண்முகநாதன்,யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திரு. தெய்வேந்திரன் ஆகியோரைச் சந்தித்து இங்குள்ள நிலைமைகளை அறிந்து கொண்டனர்.

அத்துடன் மாவட்டத்தின் சில பகுதிகளுக்கும் நேரடியாக சென்று நிலைமைகளை அவதானித்தனர், (க)

உயர்திரு. க சிவவாகீசர்அவர்களுக்கான சேவை நலன் பாராட்டு விழா இன்று மாலை வட்டு. திருஞான சம்பந்த வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது

இந் நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளாக ''மயில்'' நாடகமும் இன்றைய எமது சூழலில் பெரிதும் வேண்டப்படுவது சீதையின் பொறுமையே, இலக்குவனின் கடமையுணர்வே, சுமித்திரையின் தியாகமே என்ற பட்டிமன்றம் நடைபெறவுள்ளது. தொடர்ந்து கவியரங்கம் நடைபெறவுள்ளது.

## போராளிகளின் வில்லிசை நிகழ்வு

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட தீவகப் பகுதி வேங்கைகளை நினைவு கூரும் முகமாக இம்மாதஇறுதியில் நடாத்தப்படவிருக்கும் 'மாவீரர் நினைவு கூரல்விழா'வில் தீவகப் போராளிகள் நிகழ்த்தும் ''தீவகத்தில் மானம் காத்த மாவீரர்'' என்னும் பொருள் பற்றியவில்லிசைச்சிறப்புநிகழ்ச்சியாக இடம்பெறவுள்ளது.

கடந்த வருடங்களில் வைகாசிமாதம் வீரச்சாவடைந்த தீவகப் பகுதியைச்சேர்ந்த ஒன்பது வேங்கைகளினதும் வரலாற்றை எடுத்துக் கூறும் மேற்படி வில்லிசையைப் பிரபல நாடக ஆசிரியர் திரு.ஐ. சிவசாமி அவர்களின் நெறியாள்கையில் தீவக அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சேரலாதன் அவர்கள் சக போராளிகளுடன் இணைந்து நிகழ்த்தவுள்ளார். (22)

றார்.விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் புறந்தள்ளிவிட்டு வடக்கிலும், கிழக்கிலும் எவ்வித சமாதானத்தையும் ஏற்படுத்தமுடியாது என்ற ஜனாதிபதியின் நிலைப்பாடு சரியானது என்றே நான் கருதுகின்றேன்'' என்று அனுரா பண்டாரநாயக்கா பாராளுமன்றத்

## வீதி விபத்து

கதையிலேயே செலுத்தப்படுகின்றது. இந்நிலையில் முன்னாலோ, பின்னாலோ வாகனங்கள் வந்தால், அவற்றைப் புரிந்துகொள்வதற்குச் சிறிது நேரம் எடுக்கின்றது. இதற்குள் விபத்துக்கள் ஏற்பட்டு இழப்புக்களைச்சந்திக்கநேரிடுகின்றது.

வாகனங்களின் பிறேக்- வெளிச்சம் என்பன இல்லாமல் பகலிலும், இரவிலும் செலுத்துவதால் விபத்துக்கள் அதிகரிக்கின்றன.

துவிச்சக்கரவண்டிகளில் அளவுக்கதிகமானசுமைகளை ஏற்றி அபாயகரமானமுறையில் வீதி வழியே செலுத்துவதாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

மினிபஸ்களில் பயணம்செய்யும்போது மிதிபலகையில் நின்றபடி பயணம் செய்வதாலும் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

மோட்டார் சைக்கிள்களில் செல்லும்போது இன்னொரு மோட்டார் சைக்கிளுடனோ அல்லது துவிச்சக்கரவண்டியுடனோ சமாந்தரமாகச்செல்லுதல். கைகொடுத்து இழுத்துச்செல்லுதல் இவையும்விபத்துக்கள் ஏற்படுவதற்குக் காரணம் ஆகும்.

அளவுக்கதிகமானபிரயாணிகளை ஏற்றிச் செல்லுதல்.

வாகன விபத்துக்களையும், இழப்புக்களையும்தவிர்ப்பதற்குத் தமிழீழக் காவல்துறை நகரப் போக்குவரத்துப் பிரிவினரால் நடைமுறைப்படுத்தப்படும் வீதி ஒழுங்குமுறைகளைப் பின்பற்றுமாறு காவல்துறைத் தலைமைச் செயலகம் வெளியிட்டுள்ள அவ்வறிக்கை பொதுமக்களைக் கேட்டுக்கொள்கிறது.

எனவும் தெரிவித்தார்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இன்றைய போக்கை கண்டனம் செய்த பிரதமர் அன்று இந்திய அரசைக் கண்டித்தவர்கள் இன்று புகழ்கின்றார்கள் என்றார். 'சுதந்திரக் கட்சியினர் சங்கீத நாற்காலி விளையாட்டில் ஈடுபட்டிருப்பதாகவும் இவர்களது உளப்பாங்கு எப்போதும் அரசியல் லாபங்களைக் கருதி எந்த சந்தர்ப்பத்தையும் இவர்கள் பயன்படுத்துவார்கள் என்றார்.

'உடும்பின் இறைச்சியைச் சாப்பிடுவதற்கு ஆசை பெருகும் போது உடும்பு போன்ற பல்லி வகையைச் சார்ந்த கவறக் கொய்யாவும் உடும்பு மாதிரியே தெரியுமாம்' என்ற சிங்களப் பழமொழியையும் ஞாபகப்படுத்தினார்.

## விண்ணப்பப் படிவம் இல்லை

யாழ். ஆட்பதிவுத் திணைக்களத்தில் தேசிய அடையாள அட்டை விண்ணப்பப்படிவங்கள் இல்லை. இதனால் பரீட்சைக்குத்தோற்றும் மாணவர்களும், பொதுமக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்

புதிதாக அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும் புதுப்பித்துக்கொள்ளவும் விண்ணப்பதாரிகள் யாழ் மாவட்டத்திலுள்ள கிராம சேவையாளர் அலுவலகம் மற்றும் ஆட்பதிவுத்திணைக்களத்துக்குச் சென்று ஏமாற்றத்துடன்திரும்புவதாகத்தெரிவிக்கப்படுகிறது.

## 1991 ஆம்

வதற்கு தற்பொழுது மும்முனைத் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மோசடி செய்யமுடியாத கடவுச் சீட்டை விநியோகித்தல், துறைமுகங்கள் விமான நிலையங்களில் கடும் கண்காணிப்புச் செய்தல், குற்றமிழைத்தது எனக்கண்டுபிடிக்கப்பட்டால் கடும் தண்டனைகளும் வழங்கப்படல் என்பன மூலம் மோசடிகள் தடுக்கப்பட உள்ளதாக திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் தெரிவித்துள்ளார்.

## நினைவூட்டுகிறோம்

மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பெறப்பட்ட நிரந்தர போக்கு வரத்து அனுமதி அட்டைகள்யாவும் இம்மாதம் 31 ஆம் திகதி வரையுமே செல்லுபடியாகும். மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள போக்கு வரத்து அனுமதி வழங்கும் காரியாலயத்தை நாடவும். [சி-4421]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992ஆம் ஆண்டு மேமாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.